
# திராவிடத்தால் வாழ்கிறோம்

869

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

15

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ‘பராசக்தி’ அதிகாரத்துக்கு எதிரான விளிம்பின் குரல்!

திராவிட இயக்கத்தின் அரசியலே பன்மைத்துவ அரசியல்தான்! அது என்றைக்கும் ஒற்றை இலட்சியத்தைப் பேசியதில்லை. ‘பொதுவுடைமை’ எனும் ‘வர்க்க விடுதலை’, ‘தமிழ் இன விடுதலை’, ‘பெண் விடுதலை’, ‘சாதி ஒழிப்பு’ என்கிற பல்வேறு அரசியல்களில் ஏதேனும் ஒன்றை மட்டும் தனது இலக்காகக் கொண்டு, தனித்தனி இயக்கங்களாகக் கட்சிகள் தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருந்தபோது, ‘திராவிட இயக்கம்’ மட்டும் இவையனைத்தையும் ஒட்டுமொத்த இலட்சியமாகக் கொண்டு பேசிய, இயங்கிய இயக்கமாக இருந்து வருகிறது.

அதாவது தமிழ்ச் சமூகத்தின் மீது வினை செலுத்திய, ஆதிக்கம் செய்த அனைத்து முரண்களையும் தீர்த்து அனைத்து மக்களின் நலன்களுக்காகவும் பாடுபடும் கட்சியாக தி.மு.க. இருப்பதை நாம் காண்கிறோம். இந்தப் பன்மைத்துவம் அரசியல் அரங்கில் மட்டுமல்ல, கலைஞர் அடியெடுத்து வைத்த கலை இலக்கியத் துறையிலும் அவரால் முன்வைக்கப்பட்டுள்ளதை ‘பராசக்தி’ வழியாக முழுமையாகக் காண முடியும்.

### பிச்சைக்காரர்கள் சங்கம்

பொதுவாகப் பெரும்பான்மையான தமிழ் சினிமாக்கள், இன்றுவரை பிச்சைக்காரர்களை, நகைச்சுவைக் காட்சிக்கான கச்சாப் பொருளாகவே பயன்படுத்தி வருவதைப் பார்க்கலாம். விதிவிலக்காக, பிற்காலத்தில் வந்த ஒரு சில திரைப்படங்கள் மட்டும் பிச்சைக்காரர்களின் துன்ப, துயரங்களைக் காட்சிப்படுத்தின. ஆனால், இன்றைக்கு சுமார் 73 ஆண்டுகளுக்கு முன்பாக, 1952 -ஆம் ஆண்டு வெளியான ‘பராசக்தி’ திரைப்படம், பிச்சைக்காரர்களின் துன்ப துயரங்களைப் பற்றி மட்டுமல்ல, அவர்களும் பிறரைப் போல அனைத்து உரிமைகளுக்கும் உரிய மனிதர்கள்தான் என்பதை அழுத்தமாகப் பேசியது. அவர்கள், சங்கம் வைத்துக்கொள்ளவும், தங்களது உரிமைகளுக்குக் குரல் கொடுக்கவும், போராடவும் உரிமை உடைய மனிதர்கள்தான் என்பதை ஆணித்தரமாகச் சொல்லியது.

பிச்சைக்காரர்கள் என்போர் வேற்றுக் கிரகத்தில் இருந்து வந்து குதித்தவர்கள் அல்லர். இந்தப் பூமியில் ஏற்படும் எதிர்பாராத சமூக அரசியல் மாற்றங்களால் அல்லது பெரும் விபத்துகளால் எத்தனை பெரிய பணக்காரருக்கும் இந்த நிலை ஏற்படலாம் என்பதை, எந்த மதராஸ் பட்டணத்தில் குணசேகரன் கோட் சூட் அணிந்து நவ நாகரிகமாக வந்து இறங்கினானோ, அதே மதராஸ் வீதியில் உதவி வேண்டி கையேந்தி நிற்பவனாகவும் அவனைக் காட்டியதன் மூலம் ஏழை பணக்கார அந்தஸ்து என்பவை எல்லாம் நிரந்தரமானவையல்ல என்று கலைஞர் உணர்த்தினார்.

அதே போல வசதியாக வாழ்ந்த, குணசேகரனின் இளைய அண்ணன் ஞானசேகரனும் (எஸ்.எஸ்.ஆர்.) ஜப்பான் குண்டுவீச்சில் ஒரு காலை இழந்து தமிழ்நாட்டிற்கு வந்து பிச்சையெடுத்துப் பிழைப்பதுடன் பிச்சைக்காரர்களை ஒன்றுதிரட்டி சங்கம் அமைத்து, பிச்சைக்காரர்கள் நலனுக்காக மாநாடு நடத்தி அவர்களை முன்னேற்றப் பாடுபடுபவனாகவும் கலைஞர் காட்சிப்படுத்திக் காட்டியுள்ளார். இதனை ஞானசேகரனுக்கும் பணக்காரர் ஒருவருக்குமிடையிலான உரையாடல் மூலம் உணர்த்துவார்.





படங்கள் உதவி : ஞானம்



**ஞானசேகரன்:** அய்யா, ஒரு மகாநாடு நடத்தப்போறோம். அதுக்கு உங்களாலான நன்கொடை ஏதாவது...

**பங்களாவாசி :** மகாநாடா? உங்களுக்கெல்லாம் வேற வேலையில்லை?

**ஞானசேகரன் :** இல்லீங்க... வேலையில்லாத காரணத்துனாலதான் பிச்சைக்காரர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு மகாநாடு நடத்துறதுன்னு தீர்மானம் பண்ணியிருக்கோம். அதுக்கு...

**பங்களாவாசி :** பிச்சைக்காரர் மகாநாடா? சபாஷ்... உங்களுக்கெல்லாம் நாங்க நன்கொடை கொடுக்க ஆரம்பிச்சா, அப்பறம் நாங்களும் உங்களோட சேர வேண்டியதுதான். சர்தான் போப்பா... என்று விரட்டுவார்.

### ஏமாற்றிப் பிழைத்தல்

குணசேகரனும் இவ்வாறு இன்னொரு பிச்சைக்காரனாக ஆகவேண்டியவன்தான். ஆனால், அவன் பிச்சைக்காரனாகாமல் மனநலன் பாதிக்கப்பட்ட வேடமிட்டு, இந்தச் சமூகத்தில் ஏமாற்றிப் பிழைக்க எவ்வாறு கற்றுக் கொள்கிறான் என்பதற்கான நிகழ்வையும் கலைஞர் தனது திரைக்கதை வசனத்தின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

தலையில் பழக்கூடையை சுமந்து விற்று வரும் பெண் (அங்கமுத்து) குணசேகரனிடம் பழங்களைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, தெருக் குழாயில் தண்ணீர் குடிக்கச் செல்கிறாள். பசி பொறுக்க முடியாமல் குணசேகரன் அந்தப் பழக்கூடையில் இருந்து இரண்டு வாழைப் பழங்களை எடுத்துத் தின்று விடுகிறான். அதனைப் பார்த்துவிடும் பழக்காரி, அவனைத் தாக்குகிறாள். ஆனால், அதே நேரம் அங்கு வரும் மனநலம் பாதித்த ஒருவன் அவளை மிரட்டிப் பழங்களைக் கீழே கொட்டிவிட்டு, ஒரு சீப்பு வாழைப் பழத்தையும் எடுத்துச் செல்கிறான். அவனைப் பழக்காரியால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அந்தச் சம்பவத்தைப் பார்க்கும் குணசேகரன் “நான் பசிக்காக ஒரு பழத்தை எடுத்தேன். அதை வைத்து நான் வேட்டி வாங்கவோ, வீடு கட்டிக் கொள்ளவோ போவதில்லை. என்னை இந்தச் சமூகம் தாக்கியது. ஆனால், ஒரு சீப்பு வாழைப் பழத்தை எடுத்துச் செல்லும் பைத்தியக்காரனைக் கண்டு பயப்படுகிறது. ஆகவே, இனி நானும் ஒரு பைத்தியக்காரன்” என்று முடிவெடுத்து, மனநலன் பாதிக்கப்பட்டவன்போல நடிப்பதாக கலைஞர் வசனம் எழுதி இருப்பார்.

> ‘பராசக்தி’ திரைப்படத்தின், ஒவ்வொரு காட்சியும் முன் வைக்கும் அரசியலைப் பற்றிப் பேசுவதற்கு, இன்னும் ஏராளமான செய்திகள் உள்ளன.

### வடநாடு VS தென்னாடு

அதேபோல, சென்னையில் வந்திறங்கி தனது உடைமைகளைப் பறிகொடுத்து விட்ட குணசேகரன் மதுரைக்குப் போகப் பணமின்றி, தான் அணிந்திருக்கும் கால்சட்டையைக் (PANT) காட்டி, வாங்கிக் கொண்டு பணம் தருகிறாயா? என வட நாட்டு மார்வாடி வியாபாரியிடம் கேட்கிறான். அப்போது...

**மார்வாடி சேட்:** வாங்கய்யா வாங்கோ வாங்கோ... நிம்பல்கி என்ன வேணும்?

**குணசேகரன் :** எனக்கொன்றும் வேணாய்யா இந்தப் பேண்ட்ட விலைக்கி எடுத்துக்கிறீங்களா? 50 ரூபா போட்டுத் தச்சேன். நான் மதுரைக்குப் போகணும் அதுக்கு ரயில் சார்ச்சுக்காவது கொடுங்க.

**சேட் :** நிம்பல் பம்பாய் போறான்... மதுரை போறான், நம்பல்கி என்ன வந்தான். எட்டணா தர்றான்... என்கிறான்.

இயல்பாகக் காட்டப்படும் இந்தக் காட்சி மற்றும் உரையாடலில் தமிழ்நாட்டில், ஒரு தமிழன் வடநாட்டு மார்வாடியிடம் கெஞ்சும் நிலைக்கு ஆளாகிவிட்டதையும் மார்வாடி சேட் 50 ரூபாய் பெறுமானம் உள்ள உடையை அடிமாட்டு விலைக்கு மிகச்சாதாரணமாகக் கேட்பதைக் காட்டுவதன் மூலம் ‘வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது!’ என்கிற திராவிட இயக்க முழக்கத்தின் உண்மைத் தன்மையையும் எடுத்துக்காட்டி விடுகிறார்.

அதே போல குணசேகரனின் தங்கை கல்யாணியும் வட நாட்டு சேட்டிடம் பத்து ரூபாய் கடன் வாங்கிவிட்டு, திருப்பிச் செலுத்த முடியாமல் சேட் முன் கெஞ்சி நிற்கும் காட்சியும், 1950 காலத் தமிழ்நாட்டின் நிலவரத்தை, நமக்கு உணர்த்துபவையாக இருக்கும்.

இப்படியாக, நூற்றுக்கு நூறு சதவிகிதம் சமுதாய, அரசியல் புரட்சிக் கருத்துகளைக் கலைஞர் தனது பேனாவில் நிரப்பித் திரைக்கதை வசனத்தை எழுதியிருப்பார். ‘பராசக்தி’ திரைப்படத்தின், ஒவ்வொரு காட்சியும் முன் வைக்கும் அரசியலைப் பற்றிப் பேசுவதற்கு, இன்னும் ஏராளமான செய்திகள் உள்ளன.

...காட்சி விரியும்

## தமிழால் பெருமை பெற்ற அரசு ஆசிரியை!



சென்னை, ஷெனாய் நகர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றும் தமிழ் ஆசிரியை கனகலட்சுமி, தமிழை எளிமையாகப் பேசவும், எழுதவும் கற்றுத் தருவதற்காக, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் மரியாதை செய்யப்படவுள்ளார்.

‘தமிழ் வாசிப்புத் திறனில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்’ எனும் தலைப்பில், ஆராய்ச்சி செய்துள்ள ஆசிரியர் முத்து கனகலட்சுமி, தனது ஆராய்ச்சியின் அடிப்படையில், மாணவர்கள் எளிய முறையில், தமிழ் கற்பதற்கான வழிமுறையை உருவாக்கியுள்ளார். இந்தப் பணியினை அறிந்த, இங்கிலாந்தில் செயல்பட்டு வரும் ‘குரோய்டன் தமிழ்ச் சங்கம் (Croydon Tamil Sangam)’ இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இவரை மரியாதை செய்யவுள்ளது.

ஆசிரியை கனகலட்சுமி கோவில்பட்டியைச் சேர்ந்தவர். எம்.ஏ., தமிழ் மொழியியல், இலக்கியம் படித்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பி.லிட்., பட்டமும், கரந்தை தமிழ்ச் சங்கத்தில் புலவர் பட்டமும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பி.எட். பட்டமும் பெற்றுள்ளார். ராமநாதபுரம் மாவட்டத்தில், பள்ளி தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய இவர், தனது தமிழ் ஆர்வம் காரணமாக இடைநிலை ஆசிரியராகப் பணியாற்ற விருப்பம் கொண்டு சென்னை, ஷெனாய் நகர் மாநகராட்சிப் பள்ளியில் பணியில் சேர்ந்தார்.

தமிழில் எழுத, படிக்கத் தெரியாத மாணவர்களும், இவரது கற்பித்தல் முறையில் எளிமையாகக் கற்றுக் கொள்கின்றனர். லண்டன் தமிழ்ச் சங்கத்தின் விருது அறிவிப்பினை அறிந்து, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்கள் நேரில் அழைத்துப் பாராட்டியிருக்கிறார். தமிழால் உயர்ந்த ஆசிரியைக்குத் தமிழ்நாடு அரசு துணை நிற்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### வாழ்நாள் பரிசாகக் கிடைத்த படம்!



பெரியசேமூர் எஸ்.அப்பாசாமி

2010-ஆம் ஆண்டு, எனது பிறந்த நாளின்போது தி.மு.கழகத்தின் எளிய தொண்டர்களையும் அன்போடு சந்திக்கும் தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது எடுக்கப்பட்ட படம். இதை வாழ்நாள் பரிசாக பாதுகாத்து வருகிறேன்.

**– பெரியசேமூர் எஸ்.அப்பாசாமி, 10-வது வார்டு தி.மு.க. பிரதிநிதி, 18-வது வார்டு துணைச் செயலாளர், ஈரோடு மாநகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### எடுத்துக்காட்டான ஆட்சி!

சென்னை மாகாணத்தை, ‘நீதிக்கட்சி’ 16 ஆண்டுகள் ஆட்சி செய்தது. ஆனால், அது ‘இரட்டை ஆட்சிக் காலம்’ என்பதால், முழு அதிகாரமோ, முக்கிய அதிகாரங்களோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. அந்தப் பொறுப்புகளை பிரிட்டிஷார் வைத்திருந்தனர். இருந்தும், தனக்கிருந்த அதிகாரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி, அந்தக் காலத்திலேயே இந்தியாவிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது, நீதிக்கட்சி ஆட்சி.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131